தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 0.80 பைசா

# தமிழ்நாடு அரசின் அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 422 சென்னை, வெள்ளி, டிசம்பர் 29, 2017
மார்கழி 14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2048
**பாகம் II – பிரிவு 2**

**ஒரு பிரிவு பொதுமக்களின் நலன் கருதி தலைமைச்செயலக துறைகளால் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்**

**அரசாங்கத்தின் அறிவிக்கைகள்**

**வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை**

## சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017–ன் கீழ் அறிவிக்கைகள் சட்டத்தின் கீழ் 1.5 கோடி ரூபாய் வரை மொத்த விற்று முதல் கொண்ட பதிவு பெற்ற நபர்களுக்கான நமுனா தாக்கல் செய்வதற்கான நடைமுறை

*[அரசாணை நிலை எண். 185 வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 29 டிசம்பர் 2017 மார்கழி 14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண் II (2)/சிடிஆர்/1041 (டி–1)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017, (தமிழ்நாடு சட்டம் 2017/ 19)ன் பிரிவு 148–ன் படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைபடுத்தி குழுவின் பரிந்துரைகளின்படி, தமிழக ஆளுநரால், வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறையின் அறிவிக்கை எண் II(2)/சிடிஆர்/935(பி–1)/2017, 2017 நவம்பர் 15 நாளன்று தமிழ் நாடு அரசின் அரசிதழ் அசாதரணம் பக்கம்–1 பாகம்–II பிரிவு 2 ல் வெளியிடப்பட்டுள்ளதை தள்ளிவைத்து, அத்தகைய தள்ளிவைப்பிற்கு முன் செய்யப்பட்ட அல்லது செய்ய வேண்டியதை செய்யாமல் விடுபட்ட பொருள் தொடர்பாக, முந்தைய நிதியாண்டு அல்லது நடப்பு நிதியாண்டில் ரூபாய் 1.5 கோடி வரை மொத்த தொகையாக கொண்ட பதிவு பெற்ற நபர்களை, சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வெளி வழங்கல் விவரங்களை அளிப்பதற்காக பதிவு பெற்ற நபர்களின் ஒரு வகுப்பினராக கீழே விவரிக்கப்பட்டுள்ள சிறப்பு வழிமுறைகளை பின்பற்றலாம் என அறிவிக்கப்படுகிறது.

2) கூறப்பட்ட நபர்கள் கீழுள்ள அட்டவணை நிரல்–2ல் குறிப்பிடப்பட்டுள்ள காலாண்டில் செய்த சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வெளிவழங்கல் விவரங்களை, கூறப்பட்ட அட்டவணை நிரல்–3ல் தொடர்புடைய பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரைக்குள் படிவம் ஜி.எஸ்.டி ஆர் 1–ல் அளிக்கலாம். அதாவது

அட்டவணை

| வ.எண் | படிவம் ஜி.எஸ்.டி ஆர் 1–ல் விவரங்கள் எந்த காலாண்டிற்கு அளிக்கப்பட்டுள்ளது. | படிவம் ஜி.எஸ்.டி ஆர் 1–ல் விவரங்களை அளிப்பதற்கான கால அளவு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | ஜீலை – செப்டம்பர்,2017 | 10 ஜனவரி 2018 |
| 2. | அக்டோபர் – டிசம்பர்,2017 | 15 பிப்ரவரி 2018 |
| 3. | ஜனவரி – மார்ச்,2018 | 30 ஏப்ரல் 2018 |

3) சட்டத்தின் பிரிவு 38–ன் உட்பிரிவு (2) மற்றும் பிரிவு 39–ன் உட்பிரிவு (1)ன் கீழ், விவரங்கள் அல்லது நமூனா அளிக்கவேண்டிய கால வரம்பு நீட்டிப்பு அல்லது சிறப்பு வழிமுறை, நேர்வுக்கேற்ப ஜுலை 2017–ல் முதல் மார்ச் 2018–ம் வரையிலான மாதங்களுக்கு அலுவல் முறை அரசிதழில் இதற்குபின் அறிவிக்கப்படும்.

**படிவம் ஜிஎஸ்டிஆர்–4ல் நமூனா அளிக்கத்தவறுதல் சட்டத்தின் கீழ் பிரிவு 47ன் கீழ் செலுத்த வேண்டிய தாமதக் கட்டணம் தள்ளுபடி**

*(அரசாணை நிலை எண் 186, வணிக வரிகள் மற்றும் பதிவு (பி1), 29 டிசம்பர் 2017, மார்கழி 14 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2048)*

எண் – II (2)/சிடிஆர்/1041(டி–2)/2017

தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டம் 2017 (2017–ன் தமிழ்நாடு சட்டம் 19) (இனிமேல் இந்த அறிவிக்கையில் கூறப்பட்ட சட்டம் என குறிப்பிடப்படும்) ன் பிரிவு 128ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைபடுத்தி குழுவின் பரிந்துரைகளின்படி, தமிழ்நாடு ஆளுநரால், எந்த பதிவுபெற்ற நபரும் உரிய தேதிக்குள் படிவம் ஜிஎஸ்டி ஆர்–4ல் நமூனாவை அளிக்க தவறும்போது அந்த கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 47ன் கீழ் செலுத்த வேண்டிய தாமத கட்டணத் தொகையில் அத்தகைய தவறுதல் தொடரும் காலத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாய்க்கு கூடுதலான தொகை இதன் மூலம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இருந்தபோதிலும், கூறப்பட்ட நமூனாவில் மொத்த செலுத்தப்பட வேண்டிய தொகை மாநில வரிக்கு பதிலாக ஒன்றுமில்லை என இருக்கும்போது, எந்த பதிவுபெற்ற நபரும் உரிய தேதிக்குள் கூறப்பட்ட நமூனாவை அளிக்க தவறும்போது அந்த கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 47ன் கீழ் செலுத்த வேண்டிய தாமத கட்டணத் தொகையில் அத்தகைய தவறுதல் தொடரும் காலத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாய்க்கு கூடுதலான தொகை என்ற அளவிற்கான நிலையில் தள்ளுபடி செய்யப்படுகிறது.

முனைவர்.ச.சந்திரமௌலி,
( கூடுதல் தலைமை செயலாளர்) (முகூபொ).